## முற்போக்கு புத்தகக் கண்காட்சி:

# திராவிட அறிவியக்கத்தின் இன்னொரு அத்தியாயம்!



திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனையோ மாற்றங்களுக்கும் புதுமைகளுக்கும் முன்னோடியாக இருந்ததுபோல இப்போது இளைஞரணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பாக நவம்பர் 8 முதல் 16 வரை முற்போக்கு புத்தக கண்காட்சியை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடத்துகிறது. முற்போக்கு நூல்களை வெளியிடும் பதிப்பகங்களை மட்டும் கொண்டு ஒரு கண்காட்சி நடைபெறுவது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே இதுதான் முதன் முறை.

இந்தக் கண்காட்சில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75 ஆண்டு கால வரலாற்றை எண்பது ஆளுமைகளின் பார்வைகளின் வழியே வெளிப்படுத்தும் முத்தமிழறிஞர் பதிப்பகம் பதிப்பித்துள்ள "காலத்தின் நிறம்: கருப்பு சிவப்பு" தொகுப்பும் வெளியாகிறது. இரண்டு நாள் கருத்தரங்கையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் வழிகாட்டுதலில் மேற்கொண்டுவரும் அறிவுசார் தொடர் பரப்புரை பணிகளில் ஒன்றாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

முற்போக்கான இலக்கியங்களை, ஆய்வுகளை பதிப்பிப்பதில் முன்னணியில் இருக்கும் மொழிகளில் தமிழுக்கு தனித்துவமான இடமிருக்கிறது. திராவிட இயக்கம் தனது சமூக மாற்றத்திற்கான அரசியலுக்கு அறிவாயுதத்தையே முதன்மையான வழிமுறையாக மேற்கொண்டு வந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன்பே தந்தை பெரியாரும் அவரால் வழிநடத்தப்பட்ட பாரதிதாசன் உள்ளிட்ட மாபெரும் படைப்பாளிகளும் எழுத்தையும் பேச்சையும் ஒரு சமுதாய மறுமலர்ச்சிக்கான, முற்போக்கான கருத்தியல்களுக்கான களமாக பயன்படுத்தினர்.

நாட்டு விடுதலைக்காக காந்திய இலக்கியம் ஒரு புறமும் பாட்டாளிவர்க்க விடுதலைக்காக இடதுசாரி இலக்கியம் இன்னொருபுறமும் குரல் கொடுத்துக்கொண்டிருந்தபோது சாதிய விடுதலை, மொழி விடுதலை, இன விடுதலை, மொழி விடுதலை, மூடக் கருத்துகள் பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை என பரந்துபட்ட தளங்களிலிருந்து உருவானது தான் திராவிட இலக்கியம்.

**மனுஷ்ய புத்திரன்**
தலைவர், சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு, மாநில ஆலோசகர், கழக தகவல் தொழில்நுட்ப அணி



இலக்கியத்தை சமூக மாற்றத்திற்கு பயம்படுத்தும் அதன் கருத்தியல் பரப்புரைகள் திராவிட இயக்கத்தின் அரசியல் வழிமுறைகளில் ஒன்றாகவே இருந்திருக்கிறது. துண்டுப்பிரசுரங்கள், சிறு சிறு வெளியீடுகள், படிப்பகங்கள் என திராவிட இயக்கம் வாசிப்பை சமூக சீர்த்திருத்தத்திற்கான ஒரு வழிமுறையாகவே செயல்படுத்தி வந்திருக்கிறது. அண்ணாவும், கலைஞரும் சமூகத்தின் இறுகிய பழமைவாத எண்ணங்கள்மீது தங்கள் எழுத்துகளை சம்மட்டி அடியாக இறக்கினார்கள். கலைஞர் வாழ்நாள் முழுக்க ஒரு அரசியல் தலைவராக செயல்பட்டதுபோலவே ஒரு முழுமையான எழுத்தாளராகவும் செயல்பட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021ல் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபோது 'மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சிகள்' என்ற மாபெரும் இயகத்தை தோற்றுவித்தார். அரசின் பெரும் நிதி உதவியுடன் ஆண்டு முழுக்க தமிழ்நாடெங்கும் இந்தக் கண்காட்சிகள் பெரும் அறிவுத் திருவிழாவாகவே நடந்துகொண்டிருக்கின்றன. அத்தோடு தமிழை உலகிற்கும் உலகை தமிழுக்கும் கொண்டுவரும் சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி மற்றொரு அறிவுசார் பேரியக்கமாக நடத்தப்பட்டு வருகிறது. திராவிட மாடல் அரசு படைப்பாளிகளுக்கு வழங்கிவரும் கனவு இல்லமும் பற்பல உயரிய விருதுகளும் தமிழின் படைப்பியக்கத்திற்கு பெரும் உத்வேகம் அளித்துள்ளன.

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த அறிவியக்கத்திற்கு மேலும் பல புதுமைகளையும் வளமையும் சேர்த்து வருகிறார். இளைஞரணி சார்பில் தொகுதிகள்தோறும் நூலகங்+கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இளைஞரணி சார்பில் செயல்பட்டுவரும் முத்தமிழறிஞர் பதிப்பகம் திராவிட இயக்க சிந்தனைகளையும் சாதனைகளையும் இன்றைய இளைஞர்களுக்குக் கொண்டு சேர்க்கும்விதமாக பல சிறந்த நூல்களைப் பதிப்பித்து வருகிறது. அவற்றின் ஒரு தொடர்ச்சியே இந்த முற்போக்கு புத்தகத் திருவிழா. முன்னோடியான இந்த நிகழ்வின் நோக்கங்கள் மற்றும் பயன்களை நாம் இவ்வாறு தொகுத்துக் காணலாம்,

1. தமிழில் சமூக மாற்றத்திற்கான முற்போக்கு சிந்தனைகளுக்கான ஏராளமான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றை ஒரு சேரக் காணவும் எந்தெந்த கருத்தியல் மற்றும் இயக்கப் பின்புலங்களில் அந்த நூல்கள் எழுதப்பட்டுள்ளன என அறியவும் இக்கண்காட்சி பயன்படும். அந்த வகையில் இது அரசியல் ஆய்வாளர்களுக்கான ஒரு கண்காட்சி.

2. முற்போக்கு அரசியல் கற்க விரும்பும் வாசகர்கள்மாணவர்களுக்கு இந்தக் கண்காட்சி பெரிதும் வழிகாட்டியாக இருக்கும்.

3. முற்போக்கு அரசியல் இயக்கங்களில் பணிபுரியும் இளைஞர்கள் தங்களுக்கான நூல்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பார்வையிடவும் இக்கண்காட்சியில் மட்டுமல்ல, அதற்குப் பின்னரும்கூட வாங்குவதற்கு இக்கண்காட்சி ஒரு வழிகாட்டியாக அமையும்

4. முற்போக்கு அரசியல் இயக்கங்கள் தங்கள் நூலகங்களுக்குத் தேவையான நூல்களை ஒரே இடத்தில் பார்த்து வாங்க இந்தக் கண்காட்சி வாய்ப்பாக அமையும்

5. முற்போக்கு சிந்தனைகளுக்கான உரைகள் இடம்பெறும் கண்காட்சியாக இருப்பதால் அரசியல் விழிப்புணர்ச்சிக்கான ஒரு திறவுகோலாகவும் இந்தக் கண்காட்சி அமையும்.

இந்தக் கண்காட்சியின் வெற்றி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்ற கண்காட்சிகளை நடத்துவதற்கான உத்வேகத்தை அளிக்கும்.

ஜனநாயக விரோத, பாசிச சக்திகள் தங்களது முழு வலிமையோடு தமிழ்நாட்டின் முற்போக்கு அரசியலை சிதைக்க முயன்று வருகின்றன. பதிப்புத்துறை உள்பட எல்லா ஊடகங்களிலும் அவர்கள் செல்வாக்கு செலுத்த முற்பட்டு வருகின்றனர். இதை முறியடிக்க முற்போக்கு சிந்தனைகளை நாம் வளர்த்தெடுப்பதும் பரவலாகக் கொண்டு சேர்ப்பதும் மிக மிக அவசியம். இது ஒரு இடையறாத பணி, போராட்டம். அந்தப் பணியிடை காலத்திற்கேற்ப பல்வேறு புதுமைகளோடு நாம் கொண்டு சேர்ப்பது மிக மிக அவசியம். அதைத்தான் இந்த முற்போக்கு புத்தகக் கண்காட்சி இலக்காகக் கொண்டுள்ளது.

'முற்போக்கு' என்பது ஜனநாயகம், மனித உரிமை, பெண் விடுதலை, மதசார்பின்மை, சாதிய விடுதலை, உழைக்கும் வர்க்கத்தின் விடுதலை, சமூக நீதி, இன உரிமை, மொழி உரிமை, மாநில சுயாட்சி, எழுத்துரிமை, பேச்சுரிமை. இதற்காக எழுதப்பட்ட மகத்தான நூல்கள் இந்தக் கண்காட்சியில் உங்களுக்காக காத்திருக்கின்றன.

அறிவால் இணைவோம். தமிழால் இணைவோம்.



பஹ்ரைன் நாட்டில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபாடி போட்டியில் தங்கம் வென்ற தஞ்சை நாடாளுமன்ற தொகுதி வடுவூர் கிராமத்தை சேர்ந்த கபாடி வீரர் அபினேஷ் மோகன்தாஸை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் கவியரசு மற்றும் கழக நிர்வாகிகள், கிராம பொது மக்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழா நடைபெறும் குளத்தூர் வட்டம், கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரி மைதானத்தில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, ஆகியோர் 03.11.2025 அன்று விழா தொடர்பான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன், மரு.வை.முத்துராஜா, எம்.சின்னத்துரை, திருமதி.பா.ஜெயசுதா, கே.கே.செல்லப்பாண்டியன், துணை மேயர் எம்.லியாகத் அலி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## எஸ்.ஐ.ஆர். மூலம் வாக்காளர்களை நீக்கிவிட்டு

# தமிழ்நாட்டில் பா.ஜ.க. வெற்றி பெற்று விடலாம் என்று பகல் கனவு காண்கிறது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ. 8–

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பேட்டி வருமாறு:–

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வரும் 10ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தந்து பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதோடு முடிந்த திட்டங்களை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் வருகை தரும் நிகழ்ச்சியானது கீரனூர் அருகே உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.

எஸ்.ஐ.ஆர். தேவையில்லை என்று நாங்கள் கூறவில்லை அவசரப்பட்டு எஸ்.ஐ.ஆர். எடுக்கக் கூடாது. தேர்தல் முடிந்த பிறகு நிதானமாக யாருடைய வாக்கும் விடுபடாமல் எடுக்க வேண்டும் என்று தான் நாங்கள் கூறுகிறோம்.

எஸ்.ஐ.ஆர். தேவை என்று கூறி தி.மு.க.விற்கு எங்கே அதிகமாக வாக்குகள் உள்ளது என்பதை கண்டறிந்து அங்கு உள்ள வாக்காளர்களை நீக்கிவிட்டு நாம் வெற்றி பெறலாம் என்று பகல் கனவு கண்டு கொண்டு இருக்கிறார்கள். அது ஒரு போதும் நடக்காது.

எஸ்.ஐ.ஆர். தொடர்பாக உச்ச நீதி மன்றத்தில் எங்களுடைய வாதங்களை நாங்கள் எடுத்துக் கூறுவோம். அவசரப்பட்டு எஸ்.ஐ.ஆர். எடுக்கக் கூடாது என்று நாங்கள் வாதிடுவோம்.



பொதுமக்களிடம் விண்ணப்பங்கள் கொடுத்த பிறகு பூர்த்தி செய்து அதை மீண்டும் அவர்கள் வழங்காவிட்டால் அவர்களுடைய வாக்காளர் உரிமையை எஸ்.ஐ.ஆர். பறித்து விடும். தி.மு.க.விற்கு வாக்காளர் பட்டியலில் எந்த போலி வாக்காளர்களையும் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையான வாக்காளர்கள் நீக்கப்பட்டு விடக்கூடாது என்ற அச்சத்தின் காரணமாக தான் நாங்கள் இதை கூறுகிறோம்.

பீகாரில் உண்மையான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். செங்கோட்டையன் அ.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டுள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் எஸ்.ரகுபதி, அது அவர்களுடைய உட்கட்சி விவகாரம். இருப்பினும் அனைத்து தரப்பும் ஒன்றிணைய வேண்டும் என்று செங்கோட்டையன் கூறியதால் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

பா.ஜ.க.வை பொறுத்தவரை பல டீம்கள் வைத்துள்ளனர். அதில் செங்கோட்டையன் தலைமையிலான டீமும் ஒன்று. திண்டுக்கல் சீனிவாசனுக்கு திராணியை பற்றி பேச தகுதியில்லை, ஆப்பிளை கையில் வைத்துக் கொண்டு மாம்பழம் என்று கூறுவார். இவர் எல்லாம் திராணியை குறித்து பேசலாமா?

கொடநாடு கொலை வழக்கில் உண்மையான குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள். இந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நடந்து கொண்டுள்ளது. அது குறித்து விவரமாக பேச முடியாது.

கோடநாடு கொலை வழக்கில் நான்கரை வருடம் ஆகியும் இது வரை எடப்பாடி மீது நடவடிக்கை எடுக்கவில்லையே? என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் பாயவில்லை என்று உங்களுக்கு தெரியுமா? அதுக்குண்டான விசாரணைகள் நடந்து கொண்டு தான் உள்ளன அதை எல்லாம் வெளியே கூற முடியாது.

தி.மு.க. மீது எத்தனை குற்றச்சாட்டுகளை யார் மீது வைத்தாலும் மக்கள் எங்களுக்கு தான் வாக்களிப்பார்கள் கே.என்.நேருவைப் பொறுத்த வரை அவரது தொகுதியில் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். அது பா.ஜ.க.வுக்கும் தெரியும் அ.தி.மு.க.வுக்கும் தெரியும்.

அமைச்சர் நேரு மீது லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமலாக்கத்துறை கூறியுள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த எஸ்.ரகுபதி கொடுத்தவுடன் நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியுமா? அது உண்மையா பொய்யா என்று விசாரிக்க வேண்டாமா? ஆதாரங்கள் தயாரிக்கப்பட்டவையாக இருக்கலாம் இதையெல்லாம் விசாரித்து உண்மை கண்டறிந்து தான் லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை எடுக்க முடியும். அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நடவடிக்கை எடுக்க முடியாது? தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு உள்ளது. அதனால் தான் அதிகமான பெண்கள் உயர் கல்வி படிப்பதற்கு தமிழ்நாடு வருகின்றனர். ஒரு குற்ற சம்பவம் நடந்தால் உடனடியாக குற்றவாளிகள் கைது செய்யப்படுகிறார்கள் அதை தான் நாம் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? இல்லையா? என்பது குறித்து நீங்களே தமிழ்நாடு முழுவதும் சுற்றி பார்த்து வரலாம். அதற்கு மாவட்ட தி.மு.க. செலவுகளை ஏற்கும்.

அ.தி.மு.க.வில் எடப்பாடி பழனிச்சாமி மகனின் தலையீடு அதிகமாக உள்ளதால் அ.தி.மு.க.வும் குடும்ப அரசியலுக்கு மாறி விட்டது என்று செங்கோட்டையன் கூறி இருக்கலாம்.

புதுக்கோட்டை மாவட்டம் பிசனாத்தூர் கிராமத்தில் மருத்துவ கழிவுகள் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் போராடி வருகின்றனர் இது குறித்து அமைச்சரிடம் கேள்வி கேட்டபோது மாவட்ட ஆட்சியர் இந்த ஆலையை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார். பொதுமக்களும் போராடி வருகின்றனர். எனவே நிச்சயமாக அந்த ஆலை புதுக்கோட்டை மாவட்டத்தில் வராது இவ்வாறு தெரிவித்தார்.

## ரூ.9.43 கோடி மதிப்பில்

# ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்!

பெரம்பலூர், நவ.8–

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கொளக்காநத்தம், அணைப்பாடி, கொளத்தூர், ஜெமீன் ஆத்தூர் மற்றும் நொச்சிக்குளம் ஆகிய கிராமங்களில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ரூ. 9.43 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந.மிருணாளினி, முன்னிலை வகித்தார். போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங் களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கிராமப்புற பகுதிகளுக்கு பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க ஒவ்வொரு கிராமங்களிலும் நேரடியாக மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்து பூர்த்தி செய்து வருகிறோம் இது மக்களுக்கான அரசு. அதனடிப்படையில் தான் இன்று கூட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் பொது மக்களுக்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு 202526 திட்டத்தின் கீழ் ரூ.4.29 கோடி மதிப்பீட்டில் அரியலூரில் இருந்து ஆலத்தூர்கேட்,செட்டிகுளம் வழியாக செஞ்சேரி செல்லும் மாநில சாலையை அகலப்படுத்தி பயன்படுத்துவதற்கும், அணைப்பாடி ஊராட்சியில் ரூ. 1.10 கோடி மதிப்பில், கொளக்காநத்தம் – கருடமங்கலம் செல்லும் சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துவதற்கும் மற்றும் கொளத்தூர் ஊராட்சியில் கொளத்தூர் முதல் திம்மூர் வரை செல்லும் சாலையில் ரூ.1.41 கோடி மதிப்பில் பாலம் அமைக்கும் பணியினையும், ஜெமீன் ஆத்தூர் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் ரூ.2. கோடியே 47 லட்சத்து 45 ஆயிரம் மதிப்பில் ஜெமீன் ஆத்தூர் – மேத்தால் செல்லும் மண்சாலையை தார் சாலையாக பலப்படுத்துதல் பணி என ரூ.9 கோடியே 43 லட்சத்து 45 ஆயிரம் மதிப்பிலான பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்த காலத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் நொச்சிக்குளம் பகுதியில் ரூ.16.45லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் மையம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு தெரிவித்தார்.

இதில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழு முன்னாள் பெருந்தலைவர் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ந.கிருஷ்ணமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப்பொறியாளர் தமிழமுதன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி ஜெயஸ்ரீ, ஆலத்தூர் வட்டாட்சியர் முத்துக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சேகர் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வே. ரூசோ**

**நவம்பர் 8 (1998)**



தனது பள்ளிப் பருவம் முதல் கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்.

சிவகங்கை மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளராகவும் – மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவராகவும் பணியாற்றியவர்.

இளைஞர்களின் அன்பையும் – மக்களின் நம்பிக்கையையும் பெற்று கழகத் தலைமையின் கனிவான ஆதரவைப் பெற்று, மாவட்டத்து முன்னணியினரின் பாசத்திற்குரிய பண்பாளராக வளர்ந்தவர்.

"கண்ணிலேயே நிற்கும் கண்மணி" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.